மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.7.2014

மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. U.உடையப்பன் அவர்கள் 30.3.2014 அன்று மதுரை – திண்டுக்கல் பிரதான சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகரம், பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஜாபர்ஷா அவர்கள் 30.3.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், மங்களமேடு காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.விஜயராஜா அவர்கள் 31.3.2014 அன்று மங்களமேடு, திருச்சிராப்பள்ளி – சென்னை தேசிய நெடுஞ்சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி வழிகாட்டி கம்பத்தில் மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு A.ஜானகிராமன் அவர்கள் 2.4.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர ஆயுதப் படை பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ராஜன் அவர்கள் 3.4.2014 அன்று ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 4.4.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், கீழராஜகுலராமன் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. வெங்கடசுப்பிரமணியன் அவர்கள் 5.4.2014 அன்று பிள்ளையார்குளம் கிராமம், ஆலங்குளம் - வன்னியம்பட்டி நெடுஞ்சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது நிலை தடுமாறி பள்ளத்தில் விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், தல்லாகுளம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ராஜேந்திரன் அவர்கள் 5.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. K. சேட்டு அவர்கள் 6.4.2014 அன்று கீரனூர் கிராமம், வாளமங்கலம் பிரிவு ரோடு அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. K. ராமலிங்கம் அவர்கள் 7.4.2014 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், கன்டோண்மென்ட் போக்குவரத்து ஒழுங்கு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.சந்திரசேகர் அவர்கள் 7.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ராஜன்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் உடையப்பன், ஜாபர்ஷா, ராமலிங்கம், சந்திரசேகர்; தலைமைக் காவலர்கள் ஜானகிராமன், சேட்டு; இரண்டாம் நிலைக் காவலர் திரு. வெங்கடசுப்பிரமணியன்; முதல்நிலைக் காவலர்கள் விஜயராஜா, ராஜேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**